உ

கடவுள்துணை.

கலியுகச்சிந்து,



சென்னை-புரசை

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

69

கலியுகச்சிந்து.

நாதநாமக்கிரியை - பல்லவி.

ஞாலத்தைபாராய் கலிகாலக்கொடுமையின்
கோலத்தைக் கேளாய்.

அநுபல்லவி.

காலத்தின் கோலத்தை ஞாலத்தின்மேலோத
பாலொத்தமொழியாளே வேலொத்தவிழியாளே.(கா)

சரணங்கள்.

அரிசிப்படிரெண்டு பணமாய்முழிக்குது
ஐயய்யோயேழைகள் புழுக்காய் துடிக்குது
வரியெல்லாம்தலைக்குமேல் வாரண்டாய்திரியுது
வாங்கினகடனேதான் கோட்டுக்கிழுக்குது
புலம்புதேகுடிகள்—ஆடி ஆவணிகூட
பொளக்குதே வெய்யல்

நாட்டுப்புரங்களெல்லாம் ஓட்டம்பிடிக்குது
நஞ்சைபிஞ்சைகளெல்லாம் பஞ்சாய்பரக்குது
காடுமேடுகளெல்லாம் கட்டுதிட்டமாச்சு
காக்காய்குருவிகூட பிழைப்பதரிதாய்போச்சி (கால)

மழையோமழையோவென்று மானம்பார்க்கலாச்சி
மாடுஆடுகள்பேச்சி பில்லுக்கலையலாச்சி
தரையும் ஒணந்துபோச்சி தண்ணிப்பந்நீராச்சி
தங்கத்தைவைத்தாலும் வட்டிகேழ்க்கலாச்சி
முறைகெட்டுபோச்சி—தாயார்தமக்கைபோலே
பெண்தேடலாச்சி

கொண்டமனைவிபேச்சி கூழுக்கலையலாச்சி
கூத்தியார்பாதத்தைக் காத்துயிருக்கலாச்சி
சொந்தப்படிப்பெல்லாம் சூத்துக்குமணையாச்சி
சொல்லுமிங்கிலீஷுக்கு நல்லப்பிழைப்பாச்சி (கால)

காட்டில்மழையாச்சி 'கழனிவொணந்துபோச்சி
கலப்பைதாத்துக்கோலை யிரப்பில்சொருகலாச்சி
போட்டவிரைகளெல்லாம்பொரியாய்பொரிஞ்சிபோச்
பிள்ளைகுட்டிகளெல்லாங் கஞ்சிக்கலையலாச்சி
மண்மாரியூச்சி—காட்டுப்புறங்களெல்லாங்
கண்மாரியாச்சி

யிருந்தவிரைகளெல்லாம் யேனைவிரைத்தமென்று
யிரவும்பகலுமாக முறையிட்டிருக்கும்போது
எடுயெடுவாயிதா பிடிபிடிஆளென்று
ஏழெட்டுபேராக வீட்டைவளைத்துகொண்டு
ஜப்திகளாச்சி—ஆடுமாடுகளெல்லாம்
யேலமாய்போச்சி

வீட்டுவரிவந்து வாசக்கால்தூக்குது
வேபாரவரிந்து சாமானைவளைக்குது
குப்பைவரிவந்து குடிசையைபிடுங்குது
கொளுத்தும்விளக்குவரி கழுத்தைப்பிடிக்குது
வேடிக்கையாச்சி—தட்டுமுட்டுகளெல்லாம்
வியாபாரமாச்சி

களிதின்றுபிழைக்கவும் கேவுறுமொரைக்குது
கம்புசோளங்கூட வம்புகள்செய்யுது

கூலிக்கிபோனாலும் லஞ்சங்கள்கேழ்க்குது
குடுத்தாலும்நாலாளை் அடித்துத்துரத்துது(கால)
சீமைசீட்டிகளெல்லாம் சிரிப்பாய்சிரிச்சிபோச்சி
சமுசாரி தாசியும் வேஷம்மொன்றாய்போச்சி
பொருமையாபிழைத்தவர் பொழுப்புக்குயிழுப்பாச்சி
பொய்சாட்சிசொல்வோர்க்கு கைமேல்காசியாச்சி
கடைகெட்டுப்போச்சி—சருவகுலங்களும்
நடைதப்பிப்போச்சி

அந்தணர்குலத்துட ஆசாரம்போச்சுது
அவரவர்சாஸ்திரம் பரணைமேல்தூங்குது
பணமென்றால்பிணங்கூட வாய்கொஞ்சந்திறக்குது
பாசுபண்ணவர்பேச்சி வேலைக்கிஞ்சுங்குது (கால)
தாயொப்பிவந்தாலும் சேயன்புணரலாச்சி
தம்பித்தமயன்பெண்டை தெம்பாயிழுக்கலாச்சி
நாய்போலேவிலைமாதர் யெங்கும்பெருத்துப்போச்சி
நாயகன்ஒப்பியே கூட்டிப்பிழைக்கலாச்சி
சுணைகெட்டுப்போச்சி—பணமேபெருமையாச்சி
ஜாதிகள்போச்சி

பலத்தஉத்தியோகத்தை பார்க்கமனைவியாச்சி
படுத்துயிருக்கும்போதே அடுத்துப்புணரலாச்சி
கலங்கிவேசியரெல்லாங் கண்ணீர்சொரியலாச்சி
கட்டினமனைவியை விட்டுப்பிழைக்கலாச்சி
வழிகெட்டுப்போச்சி—தகப்பன்பிள்ளையுங்கூட
வழக்காடலாச்சி

பூமியில்பிழைப்பற்று காவியுடுத்தலாச்சி
பூர்னமாய்கெஞ்சாதம் அடித்துமயங்கலாச்சி
சாமியென்றவருக்குப் பேர்கள்நிகளமாச்சி
சாம்பலைப்பூசவும் தெரியாதவர்க்குச்சீச்சீ (கால)

கடுகடுத்துப்பெற்றத் தாயையுதைக்கலாச்சி
கட்டினமனைவிசொல் தட்டாதிருக்கலாச்சி
கொடுத்தக்கடனைக்கேட்டால்கோட்டைக்காட்டலாச்
கொஞ்சம்யேமாந்தாக்கால் பஞ்சாயடிக்கலாச்சி [சி
அஞ்சாமல்போச்சி—பெரியோர்சிரியோரென்ற
அளவெல்லாம்போச்சி

அருத்தமுண்டைகள்பிள்ளை பெத்துவளர்க்கலாச்சி
அப்பன்யேமாந்தாக்கால் தாயைப்புணரலாச்சி
திருட்டுபிள்ளைகள்பெத்து முரித்துயெறியலாச்சி
தெய்வத்தைநினைப்பவர் லட்சத்திலொன்றாச்சி (கால)

கட்டிகொடுக்குமுன்னே கள்ளக்குட்டிகலாச்சி
கட்டினமூன்றாநாள் பெத்துமுரிக்கலாச்சி
மட்டிமுண்டைகளாலே மானங்கெட்டுபோச்சி
மாதாபிதாபேச்சி தலையைகுனியலாச்சி
அதிகமாய்போச்சி—குடிகெட்டிமுண்டைகள்
அணியணியாச்சி யிப்போ

பெண்கள்வியாபாரம் செய்துபிழைக்கலாச்சி
புருஷன்வெளுக்கக்கட்டி பினந்திரியலாச்சி
சண்டைசாடிக்கெல்லாம் பணத்தையிரைக்கலாச்சி
சாமிக்கிகொடுப்பவர் பூமியில்மருந்தாச்சி (கால)

பஞ்சாங்கம்படிப்பெல்லாம் பஞ்சாய்பரந்துபோச்சு
பரச்சிக்கும்பணந்தந்து சிரப்பாய்நடக்கலாச்சி
அஞ்சாமல்பரசோத்தில் அந்தணர்விழலாச்சி
அவர்கள்மனைவியெல்லாம அழுதுபுலம்பலாச்சி
குலங்கெட்டுபோச்சி—அந்தணருலேயே
குடிகெட்டுபோச்சு

துரைக்குபுரந்தவன்போல் டொப்பிசட்டைகளாச்சி
சோடும்செருப்பும்போச்சி பூட்சுதூக்கலாச்சி
அடுப்புங்கரையில்கூட யிங்கிலிஷ்பேசலாச்சி
ஐயமார்குடிக்கவே அடிக்கொருகடையாச்சி (கா)

சீமைதுரைகளெல்லாம் காவியுடுத்தலாச்சி
சாதிதமிழரெல்லாம் சட்டைமாட்டலாச்சி
காலம்தலைகீழாச்சி கருப்புங்குடியாய்போச்சி
கண்டவிடங்களெல்லாம் பைபில்யிரச்சலாச்சி
வேதங்கள்போச்சி—கிருஸ்தவர்கூச்சலே
வேடிக்கையாச்சி

கோவில்குளங்களெல்லாம் குட்டிச்சுவருய்போச்சி
குடியரதிகமாச்சி கடைகள்பெருத்துபோச்சி
கிருமதேவிகளெல்லாம் கடையாய்பரந்துபோச்சி
கண்டவிடத்தில்வாந்தி பேதியதிகமாச்சி (கா)

கலியுகனடத்தைக்கு கடவுளும்சிரிக்குது
காலத்துக்கேத்தாப்போல் மாரிகள்வருகுது
குளிருகாச்சலில்பாதி கூண்டோடேசாய்க்குது
குனிந்துயெழுந்தபேரை வாந்தியில்மடக்குது

பேதியில்பாதி—யிப்படிமடிஞ்சியும்
துள்ளுதேகூவி ஐயோ
யின்றைக்கிருந்தவர் நாளைக்கில்லையென்று
யார்க்குந்தெரியுமிந்த ஊர்க்குந்தெரியுமிது
யேனோகெருவங்கொண்டு வீணைகமடியுது
யெண்ணிப்பார்த்தால்தினம் ஆயிரம்சாயுது(கா)
பணங்கையில்வருதென்று, பொய்சாட்சிசொல்லாதே
பரிதேசியேழைமேல் புலிபோலேதுள்ளாதே
பூழுவேஷம்போட்டுநீ மோசங்கள்செய்யாதே
மூச்சிவெளியேபோனால் சீச்சீபிணமாச்சே
கெருவங்கொள்ளாதே—நிலையில்லாகழுதேநீ
கெட்டுப்போகாதே
ஊத்தைஉடலைநம்பி ஓதிபோலேநிகளாதே
ஊரைபகைத்துகொண்டு வேருடன்மாளாதே
காத்தைமலைந்துகொண்டு கருமங்கள்தேடாதே
கலியுகசிந்தைநீ பழுதாகசொல்லாதே(கா)

கும்மிப்பாட்டுகள்.

அண்ணனுக்குத்தம்பி துரோகஞ்செய்யுங்காலம்
அப்பனைப்பிள்ளை யுதைக்குங்காலம்
பண்ணினநன்றி மரக்குங்காலம்—பழி
பாவத்துக்கஞ்சாகலிகாலம். (கா)
புருஷனைப்பெண்டீ ருதைக்குங்காலம்-பெற்ற
பெண்ணை தகப்பன் புணருங்காலம்

தருமநெறியை மரக்குங்காலம்—கெட்ட
தருதலைக்கேத்த கலிகாலம் (உ)
தங்கையை அண்ணன் புணருங்காலம் ஐயா
தாயைப்போலிந்து மடிந்தகாலம்
மங்கைக்கு மஞ்சளரைக்குங்காலம் ஐயா
மானமில்லாத கலிகாலம் (௩)
கொண்டபுருடனை திட்டுங்காலம் இவள்
கூலிகொடுத்து புணருங்காலம்
முண்டைகள்பிள்ளை பெருகுங்காலம் ஐயா
மோசத்துக்கஞ்சா கலிகாலம் (௪)
கட்டினமாது அலையுங்காலம் யிவன்
காவியுடித்தித்திரியுங்காலம்
புட்டிபுட்டியாய் குடிக்குங்காலம் ஐயா
புளுகருக்கேத்த கலிகாலம் (௫)
பொய்யானபத்ரமெழுதுங்காலம் சாட்சி
பூட்டியேகோட்டில் கெலிக்குங்காலம்
தெய்வப்பொருளைத்திருடுங்காலம் இது
தீவினைக்கஞ்சா கலிகாலம் (௬)
அருமையரியாமுரட்டுக்காலம் மிது
கர்ம்மியைபோற்றுந் திருட்டுங்காலம்
சிறுமணவூர்முனி சாமிசொல்வாக்கியம்
சோதித்துபார்கலி காலகுணம்

கலியுகச்சிந்து முற்றுப்பெற்றது.